Reg.No : | | | | | | | | | | | |

# தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் மகளிர் கல்லூரி, வேலூர் - 1
(தன்னாட்சி)

பருவமுறைத் தேர்வுகள்

நவம்பர் - 2018 15CTA3A

## இலக்கியம் III சமயப்பாடல்களும் சிற்றிலக்கியங்களும்

**நேரம்: 3 மணி** **மதிப்பெண் : 75**

### பகுதி - அ (10 x 2 = 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

1. கங்கை ஆடில் என்! காவிரி ஆடில் என் ! எனத் திருநாவுக்கரசர் கேட்க காரணம் யாது?
2. எவற்றிலெல்லாம் சிவம் நிறைந்தும் மறைந்தும் இருக்கிறார்?
3. கண்ணன் திரு அவதாரம் செய்த நட்சத்திரம் எது?
4. பாவை நோன்பு நோற்போர் செய்வனவும் கூடாதனவையும் யாவை?
5. யாகத்தீயை எங்கு வளர்ப்பதாக நந்திக்கலம்பகம் குறிக்கிறது?
6. கலிங்கத்துப் பரணி படை நெருக்கத்தை எவ்வாறு காட்டுகிறது?
7. மூன்று வயதில் திருஞான சம்பந்தர் கற்றது என்ன?
8. வந்தகுலங்கள் ஐந்தெனக் குறிக்கப்படுவன எவை?
9. கித்தேரி அம்மாளின் அருட்தன்மை யாது?
10. எவ்வாறு அருள்புரிய வேண்டுமென மஸ்தான் வேண்டுகிறார்?

### பகுதி - ஆ (5x 5 = 25)

**எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

11. ஈசனை எண்ணுபவர்களுக்குக் கிடைக்கும் பலன்கள் யாவை?
12. இனி உன்னை என் இரக்கேனே என்று மாணிக்கவாசகர் கூறக் காரணம் யாது?
13. பெரியாழ்வார் மெலிந்தமைக்கான காரணம் யாது?
14. படை வீரன்காட்டும் நந்திவர்மனின் பெருமைகள் யாவை?
15. எதைப்பாடி வருத்தம் தீர்ந்து மகிழ்ந்திருப்போம் என்கின்றனர் பெண்கள்?
16. தலைவி தமிழ்மொழி எவ்வாறெல்லாம் விளங்குவதாக் குறிப்பிடுகிறாள்?
17. கருங்கல் மனமும் கரைந்துருகக் காரணமாகச் சிவப்பிரகாசர் கூறுவது யாது?
18. குன்று குகையருள வரவேண்டும் என மஸ்தான் வேண்டுவதை விளக்குக.

### பகுதி - இ (3 x 10 = 30)

**கீழ்க்காணும் வினாக்களுக்குக் மூன்று பக்க அளவில் விடையளிக்கவும்.**

19. (அ) பாவமும் பழியும் நீங்க இறைவனிடம் நாவுக்கரசர் வேண்டுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) கண்ணனின் திரு அவதாரச் சிறப்பை விளக்குக.

20. (அ) கலிங்கத்துப் பரணியில் காட்டப் பெறும் நால்வகைப் படைகளின் சிறப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழைத் தூது விடக் காரணமாகத் தலைவி கூறுவன யாவை?

21. (அ) கித்தேரியம்மாளின் பிறப்பினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மஸ்தான் சாகிப்பு வெளிப்படுத்தும் இறைச் சிறப்புகளை விளக்குக.

* * * * * *